**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை- 2012**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (பிபிஈ)**

சபையின் வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் நிதிக்கூற்றுக்களில் நியாயப்பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் வடமத்திய மற்றும் தெற்கு பிராந்திய அலுவலகங்களிற்கு சொந்தமான அச் சொத்துக்களில் சில சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை என மாதிரிச் செவ்வையில் வெளிப்பட்டது.

**(ஆ) எல்கேஏஎஸ் 20- அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்தல்கள்**

சந்தை வீதங்களை விட குறைவான வட்டி வீதங்களில் வழங்கப்பட்ட அரசாங்க கடன்களின் நன்மைகள் நிதிக்கூற்றுக்களில் அரசாங்க மானியமாக கருதப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 சனவரி 01 இல், 2011 திசெம்பர் 31 மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகனங்களின் உதிரிப்பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்களின் இருப்புக்கள் தொடர்பான முறையே ரூபா 394,530,751, ரூபா 610,325,081 மற்றும் ரூபா 698,216,120 ஆன தொகைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மூலதனமாக்கல் நியமங்களைக் கருத்திற்கொள்ளாமல் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

மேலும், மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள், குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ரூபா 698,216,120 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதி ரூபா 690,530,690 ஆக இருந்தது. எனவே, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 7,685,429 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 214,352,013 தொகையான அவர்களுடைய மாதாந்த தண்ணீர் பட்டியலின் தீர்ப்பனவு நேரத்தில் 2012 ஆம் ஆண்டிற்காக வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்ட மொத்த தள்ளுபடிகள் (கழிவுகள்) காசுக் கழிவுகளாக கருதப்படாமல் மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்ததன் விளைவால் விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்ட மொத்த வருமானம் அதேதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியால் (ஜேபீஜசீ) நிதியளிக்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் செயற்திட்டம் (எஸ்எல் பி 66) நிறுத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய செயற்திட்டமானது பின்னர் இரத்து செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேலைத்தளத் தயார்ப்படுத்தல், கொடுப்பனவு அடியிதழ், தாபனச் செலவினம் மற்றும் ஆலோசனை சேவைக்கான கொடுப்பனவு போன்றன தொடர்பில் திரண்ட நிதியம் மற்றும் கடன் என்பவற்றிலிருந்து ஏற்பட்ட ரூபா 354.7 மில்லியன் தொகை சபைக்கான நட்டமாக கருதப்படாமல் களுகங்கை மற்றும் கொழும்பு பெரும்பாக புனரமைப்புச் செயற்திட்டங்களின் மூலதன நடைபெறும் வேலைகளிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மூலதன நடைபெறும் வேலைகளின் உள்ளபடியான காசு அசைவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிற்கு இடையில் ரூபா 10,030,554,746

ஆன வித்தியாசம் காசு வெளிப்பாய்ச்சலாக இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செலவழிக்கப்பட்ட உள்ளபடியான தொகை முறைப்படி வேண்டப்பட்ட பதிவேடுகள் பேணப்படாமை காரணமாக கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு தொடர்பில் உள்ளபடியான காசு வெளிப்பாய்ச்சலை இனங்காணப்படாமல், கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்த முக்கியமான சீராக்கல்களின் பின்னர் பெறுமதியை மதிப்பிடுவதன் மூலம் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 26,099,213,596 ஆன தொகை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 31,967,414 கூட்டுமொத்தத் தொகையான பொறுப்பு கணக்குகளின் வரவு மீதிகள், ரூபா 20,669,180 கூட்டுமொத்தத் தொகையான சொத்துக்கள் கணக்குகளின் செலவு மீதிகள் மற்றும் ரூபா 10,214,620 கூட்டுமொத்தத் தொகையான செலவினக் கணக்கிலுள்ள செலவு மீதிகள் என்பன அசாதாரணமாக இருக்குமென வெளிப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் மற்றும் நிதி நிலமையை திரித்துக் கூறப்பட்டிருந்தது.

(எ) 2011 இல் எட்டு வாகனங்களின் விற்பனையிலிருந்தான ரூபா 2,947,140 தொகையான விற்பனைப் பெறுகைகள் அந்த ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் வாகன விற்பனை கணக்கிற்கு அந்த வாகனங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு தகவல்கள் ரூபா 3,783,340 ஆல் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பையும் மற்றும் குறைவையும் விளைவித்திருந்தது.

(ஏ) ரூபா 3,050,766 தொகையான சொத்துக்களின் விற்பனையிலிருந்தான நட்டம் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்படாமல் உரிமை மூலதனக் கூற்றில் காட்டப்பட்ட நிறுத்திவைத்த இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. எனவே, விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்ட தேறிய இலாபம் அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2012 இல் ஹக்மன களஞ்சியத்திற்கு பெறப்பட்ட ரூபா 5,337,718 தொகையான இருப்புக்கள் நிதிக்கூற்றில் இடைப்போக்கிலுள்ள பொருளாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2012 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்ட நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களால் சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 29,836,125 தொகையான இருப்பு இருப்பு பேரேட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலாக வேறு சில வெளிநாட்டு

நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களால் கையளிக்கப்பட்ட 889 இருப்பு விடயங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்கிற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ரூபா 1,025,553,690 தொகையான 36 பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் தரகிடப்பட்ட கிரயம் மூலதனமாக்கப்படாமல் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலையில் இருந்தது. மேலும், அவற்றில் ரூபா 316,309,795 கிரயத்திற்கான 10 செயற்திட்டங்கள் ஆறு ஆண்டுகளிற்கு மேல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஓ) ரூபா 935,920,720 ஆன நடைபெறும் வேலை மீதி நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்களை செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் 2 முதல் 7 ஆண்டுகாலத்திற்கு மேலாக மாற்றமடையாதிருந்தது.

(ஔ) சபையால் கையேற்கப்பட்ட ரூபா 130,657,409 இற்கான மூன்று வெளியார் செயற்திட்டங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய தரப்பினருக்கு பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அவை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகளில் மாற்றமடையாமல் நிலையாக இருந்தது.

(க) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட பொருளிருப்பு மீதிகள் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்திலுள்ள நான்கு களஞ்சியங்களின் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதிகளை கணக்கிற்கு எடுப்பதற்குப் பதிலாக பேரேட்டு மீதியை எடுக்கப்பட்டமை காரணமாக ரூபா 16,165,505 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கா) மொனராகலை பிராந்திய அலுவலக களஞ்சியத்திலிருந்து பண்டாரவளை பிராந்திய அலுவலகத்தின் களஞ்சியங்களிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 2,088,107 பெறுமதியான இருப்பு பண்டாரவளை பிராந்திய அலுவலகத்தின் இருப்பு கணக்கிற்கு (202) பதிவதற்கு பதிலாக இருப்பு சீராக்கல் கணக்கிற்கு (476) பதியப்பட்டிருந்தது.

(கி) தொங்கல் கணக்கில் ரூபா 3,429,965 மற்றும் ரூபா 956,115 முறையே வரவு மற்றும் செலவு மீதிகள் தெளிவுபடுத்தப்படாமல் நீண்டகாலத்திலிருந்து ஆண்டுதோறும் நிதிக்கூற்றுக்களில் முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

(கீ) 2009 இலிருந்து வவுனியா பிராந்திய அலுவலகத்தின் களஞ்சியத்தில் இருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 66,349,388 தொகை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2009 இலிருந்து

இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் எந்தவொரு பெறுமானத்தேய்வும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சபையின் தலைவர் இது தொடர்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்,

*''சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை முன்னைய ஆண்டில் வடக்கில் அசாதாரண நிலமை காரணமாக பாவனையாளர்களிற்கு ஆவணரீதியாக வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நாங்கள் உரிய சொத்துக்களிற்கு பெறுமானத்தேய்வை மதிப்பிடுவதற்கு இயலாதிருந்தது''*

(கு) 2011 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களிற்கு ஏற்பட்ட ரூபா 254,176,756 ஆன திரண்ட பெறுமானத்தேய்வு அந்த ஆண்டின் மீள்மதிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்ட முற்கொண்டுவரப்பட்ட நிறுத்திவைத்த உழைப்புக்களிலிருந்து ரூபா 33,962,411 தொகையான 2012 ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுடன் சேர்த்து கழிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபம், ரூபா 33,962,411 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கூ) 2012 ஆம் ஆண்டின் நிர்வாகச் செலவினத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 776,836,147 ஆன மீள்மதிப்பு நட்டம் ரூபா 16,087,247 ஆன முன்னைய ஆண்டு மீள்மதிப்பு நட்டத்தை உள்ளடக்கியிருந்தது. இதன்விளைவாக, மீளாய்வாண்டிற்காள நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தேறிய இலாபம் ரூபா 16,087,247 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கெ) ஜட்டியாந்தோட்டை நீர் வழங்கல் திட்டத்திற்கு சொந்தமான காணியின் பெறுமதி ரூபா 26,400,000 பிழையாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்த அதேநேரம் உண்மையான கிரயம் ரூபா 2,640,000 ஆக இருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 23,760,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கே) 2002 ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டு காலத்திற்காக குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து சபையால் பெறப்பட்டிருந்த அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு பொறியிலுள்ள சொத்துக்கள் ரூபா 48,276,000 ஆக பெறுமதியிடப்பட்டிருந்ததுடன் சபையின் அதே சொத்துக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. 2012 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு சொத்துக்களின் குத்தகைக் காலம் கடந்திருந்த போதிலும் அந்த சொத்துக்கள் சீராக்கப்படாமல் கணக்குகளில் இருந்தது.

(கை) ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த உப கடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி ரூபா 136,873,431 ஆக இருந்தது.

(கொ) 2009 இல் திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பிரான்ஸ் அரசாங்கம் மற்றும் பிரென்ஸ் அபிவிருத்தி முகவராண்மையால் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவி ரூபா 133,722,026 ஆக இருந்தது. பொதுத் திறைசேரி மானியமாக அதில் அரைவாசியையும் உப கடனாக அதில் மிகுதி அரைவாசி மீதியையும் கருதுகின்றது. எவ்வாறாயினும், சபையானது 2009 இல் முழுத் தொகையையும் கடனாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2012 இல் தவறினைத் திருத்தியிருந்தது. ஆனால், முழுத் தொகைக்குமாக கணக்கிடப்பட்ட வட்டி திருத்தப்பட்டிருக்காததுடன் அவ்வாறு மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் மற்றும் 2012 சனவரி 01 இல் உள்ளவாறான நிறுத்தி வைத்த இலாபம் முறையே ரூபா 4,011,661 மற்றும் ரூபா 8,023,322 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது அதேநேரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டியவைகள் ரூபா 12,034,982 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கோ) உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்கள் தொடர்பில் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான வட்டி முறையே ரூபா 229,355 ரூபா 333,845 மற்றும் ரூபா 4,495,834 ஆன தொகைகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகள் மற்றும் அட்டுறு செலவினம் ரூபா 5,059,034 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கௌ) 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு மானியக் கணக்கு மீதி ரூபா 115,885,741,431 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறிப்பிட்ட மீதியில், 48 கணக்குகள் தொடர்பில் ரூபா 15,510,711,286 கூட்டுமொத்தமான தொகைகள் அல்லது 13 சதவீதம் 2012 திசெம்பர் 31 இல் 3 முதல் 7 ஆண்டு காலமாக காலக்கழிவு செய்யப்படாமல் மாற்றமடையாது இருந்தது. காலக்கழிவு செய்யப்படாமை காரணமாக வெளிநாட்டு மானியங்களிற்குரிய சொத்துக்களின் எவ்வித விபரங்களும்

இல்லாமை காரணமாகவும் கணக்காய்வில் நிதிக்கூற்றுக்களின் விளைவை மதிப்பிட முடியவில்லை.

(ii) நோராட் 3 செயற்திட்டத்திற்குரிய வெளிநாட்டு மானியங்கள் கூடுதலாக காலக்கழிவு செய்யப்பட்டதன் காரணமாக அவ் மீதிகளில் ரூபா 3,257,197 ஆன அசாதாரண வரவு மீதி அவதானிக்கப்பட்டது.

(iii) ரூபா 5,940,582 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவு அவற்றுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iv) குறிப்பாக செயற்திட்டம் / செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்டிருக்காத 00/0/00/365/0 ஆம் இலக்க வெளிநாட்டு மானியக் கணக்கிற்கு பதியப்பட்டிருந்த ரூபா 2,451,558,287 கூட்டு மொத்த தொகையான கொடுக்கல் வாங்கல்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) யுனிசெப் மற்றும் செஞ்சிலுவை சங்க அமைப்புக்களால் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிராந்திய ஆதார நிலையங்களிற்கு நன்கொடையளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,252,656,322 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இது காலக்கழிவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்காத உரிய மானியங்களிற்கு பதிவு செய்யப்படாமல் தலைமை அலுவலக மானிய கணக்கிற்கு (கணக்கு இலக்கம் 00/0/00/365/0) மாற்றப்பட்டிருந்தது.

(ச) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய வழங்கல் நீர் வழங்கல் இணைப்புக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை, இதற்கு பதிலாக ரூபா 17,138,893 தொகையான மாதாந்த தண்ணீர் பட்டியல்கள் ஊடாக 2012 இல் அறவிடப்பட்ட புதிய இணைப்புக் கட்டணங்களின் தவணைப்பணம் புதிய இணைப்பு பொருத்துதல் தவணைக்கட்டண கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாத்திரம் செலவுவைக்கப்பட்டிருந்தது.

(சா) ரூபா 10,458,797,332 தொகையான நீர் வழங்கல் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட 11 வெளிநாட்டு கடன்களிற்கான உப கடன் உடன்படிக்கைகள் பொதுத் திறைசேரியுடன் கைசாத்திடப்பட்டிருக்காததுடன் இதன்விளைவாக, கடன் மற்றும் மானியப் பகுதிகள் கணக்காய்வில் தனித்தனயிாக இனங்காண முடியவில்லை. எவ்வாறாயினும், முழுத் தொகையும் பொதுத் திறைசேரியிடமிருந்து அனுமதி பெறப்படாமல் நிதிக்கூற்றுக்களில் செயற்திட்ட கடன்களாக கணக்கிடப்பட்டிருந்தது. ரூபா 7,832,854,966 ஆன ஆறு

வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் மீளாய்வாண்டிற்காக ரூபா 693,633,943 ஆன வட்டி மாத்திரம் இதற்காக கணக்கிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு கணக்கீட்டு கருத்திடலிற்கான அடிப்படை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(சி) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிராந்திய ஆதார நிலையங்களில் (மேல், வடக்கு) மதிப்பிடப்பட்ட ரூபா 16,057,633 பெறுமதியான பதினைந்து சொத்து விடயங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சீ) பிராந்திய ஆதார நிலையங்களில் (மேல், வடக்கு) ரூபா 2,764,160 தொகையான அகற்றப்பட்ட கட்டிடங்களின் தேறிய புத்தகப் பெறுமதி கணக்குகளில் இருந்ததுடன் அத்தகையவாறு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(சு) 2012 இல் பதிவழிக்கப்பட்ட ரூபா 41,293,375 ஆன கழிவு நீர் அகற்றலோடு தொடர்புபட்ட கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்படாமல் 2012 ஆம் ஆண்டின் நிறுத்திவைத்த இலாபத்தினுடைய ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, மீளாய்வாண்டின் இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சூ) நோர்வேயின் அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் (ஜீஓஎஸ்எல்) நிதியளிக்கப்பட்ட நோராட் செயற்திட்டத்தின் ரூபா 81,497,789 கூட்டு மொத்த தொகையான முழு நடைபெறும் வேலை மீதி ஒவ்வொரு மூலகங்களிலிருந்தும் ஏற்பட்ட சரியான தொகையை இனங்காணப்படாமல் இலங்கை அரசாங்கம் தொடர்பில் முற்கொண்டுவரப்பட்ட மீதிக்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(செ) சபையின் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொரட்டுவை, இரத்மலானை, ஜால/எக்கல கழிவு நீர் செயற்திட்டம் மற்றும் திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் போன்றவற்றின் நடைபெறும் வேலை மீதி தவறான பதிவு மற்றும் தவறான கணிப்பீடு காரணமாக அத்தகைய மீதிகள் முறையே ரூபா 22,193,932 மற்றும் ரூபா 698,523,622 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சே) நிதிக்கூற்றில் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 47,565,589 தொகையான மீள அறவிடவேண்டிய வேலைகள் தொடர்பில் ஏறபட்ட நிர்மாணக் கிரயத்தின் அறவிட வேண்டிய மீதியில் ரூபா 1,952,428 ஆன செலவு மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவாக, பெறவேண்டிய மீதி

அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் முற்பணங்களிற்கு எதிராக மேற்குறிப்பிடப்பட்ட நிலுவையாகவிருக்கின்ற மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(சை) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ரூபா 298,983,431 தொகையான பெறுமதி சேர் வரிப் பொறுப்பு தவறான கணக்கீடு காரணமாக ரூபா 14,933,814 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(சொ) சபையின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (ஏடிபி 5 ஆவது செயற்திட்டம்) என்பவற்றின் கடன் மீதிகள் தவறான கணக்கீடு காரணமாக முறையே ரூபா 18,023,250 மற்றும் ரூபா 3,612,041 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(சோ) 2012 திசெம்பர் 31 இல் இணங்காணப்படாத மற்றும் இணக்கம் செய்யப்படாத நீண்ட கால நிலுவையாக இருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 236,388,280 மற்றும் ரூபா 190,607,762 ஆக இருந்தது.

ஏற்கனவே செயலற்றவையாக வகைப்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட மீதிகளிற்கு மேல், 2012 திசெம்பர் 31 இலும் உள்ளவாறும் ரூபா 79,755,636 கூட்டு மொத்தத் தொகையான பல வேறு இனங்காணப்படாத மீதிகள் காணப்பட்டன.

(சௌ) 2000 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முற்கொண்டுவரப்பட்ட செலுத்த வேண்டிய செயலற்ற சம்பளங்கள் மற்றும் கூலிக் கொடுப்பனவுக் கணக்குகள் ரூபா 36,876,515 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் கூலிக்கொடுப்பனவுகள் தொடர்பாக ரூபா 8,802,907 ஆனது 2012 இல் மேற்குறிப்பிட்ட கணக்குகளிற்கு எதிராக தவறாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ஞ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சபையின் நலன்புரி நிதிய மீதி வங்கி சேமிப்புக் கணக்கிலுள்ள தொடர்புபட்ட முதலீட்டு மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 5,132,338 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நலன்புரி நிதியக் கணக்கில் ரூபா 14,415,579 ஆன மீதி காட்டப்பட்டிருந்த போதிலும், நலன்புரி நிதியத்தினுடைய தாபனம், நோக்கம், அதிகாரம், கையாளல், நிதியிடல், முகாமைத்துவம் போன்றவற்றின் விபரங்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை. மேலும், சபையின் 20 சதவீத ஆலோசனை வருமானம் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு

வருடாந்தம் மாற்றப்பட்டது. இதற்கு மேலாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் வருடாந்த இலாபத்திலிருந்து மாற்றப்பட்டிருந்த முறையே ரூபா 467,305 மற்றும் ரூபா 480,002 ஆன தொகைகளும் இக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாணம் கிள்நொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம், உலர் வலய நகர அபிவிருத்தி நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் மற்றும் களுகங்கை செயற்திட்டம் என்பவற்றின் தனிப்பட்ட நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிகள் முறையே ரூபா 194,563,838 ரூபா 1,351,366,762 மற்றும் ரூபா 5,015,235,578 ஆக உள்ளன. எவ்வாறாயினும், சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவை முறையே ரூபா 22,359,036, ரூபா 1,278,682,523 மற்றும் ரூபா 5,055,105,357 ஆக இருந்தன. எனவே அந்த இரண்டு நிதிக்கூற்றுக்களிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் முறையே ரூபா 172,204,802 ரூபா 72,684,239 மற்றும் ரூபா 20,130,221 ஆக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் கழிவு நீர் அகற்றுதல் தொடர்பான கடன்பட்டோர் மீதி ரூபா 3,687,794,673 ஆக இருந்தது. சபையின் வர்த்தகப் பிரிவால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 3,613,555,000 ஆக இருந்தது. எனவே, அந்த இரண்டிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் ரூபா 74,239,673 ஆக இருந்தது.

(இ) நிதிக்கூற்றில் காட்டப்பட்ட மீளாய்வாண்டிற்கான தண்ணீர் விற்பனையிலிருந்தான வருமானம் வர்த்தகப் பிரிவில் கிடைத்திருந்த தொகைகளுடன் சமப்படுத்தப்பட்டிருக்காததுடன் கீழே தரப்பட்ட விபரங்களின் படி அந்த இரண்டிற்கும் இடையில் ரூபா 182,055,961 ஆன விததியாசம் அவதானிக்கப்பட்டது.

| பிராந்திய ஆதார நிலையம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தெகை | வர்த்தகப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் தொகை (பட்டியல் சீராக்கலின் பின்னர்) | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மேல் மத்தி | 5,656,414,679 | 5,677,953,229 | 21,538,550 |
| மேல் தெற்கு | 1,381,418,942 | 1,389,410,053 | 7,991,111 |
| மேல் வடக்கு | 1,500,716,852 | 1,493,688,519 | 7,028,333 |
| தெற்கு | 1,404,893,194 | 1,447,501,728 | 42,608,534 |
| மத்திய | 1,071,320,710 | 1,068,203,950 | 3,116,760 |
| கிழக்கு | 575,096,948 | 568,032,064 | 7,064,884 |
| வட மத்திய | 564,886,271 | 559,256,085 | 5,630,186 |
| வட மேல் | 307,785,682 | 268,906,514 | 38,879,168 |
| சபரகமுவ | 448,837,880 | 471,442,261 | 22,604,381 |
| வடக்கு | 45,026,791 | 21,172,845 | 23,853,946 |
| ஊவா | 390,199,400 | 388,459,292 | 1,740,108 |
| **மொத்தம்** | | | **182,055,961** |

(ஈ) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட பொருளிருப்பு முறைமை ஊடாக போதிய தகவல்களை உருவாக்கத் தவறியமை காரணமாக பிரதான களஞ்சியத்திலுள்ள பற்றவைத்தலுடன் தொடர்பான உருப்படிகள் தொடர்பான இருப்பு பதிவேட்டின் பிரகாரம் உள்ள மீதிக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமைக்கும் இடையில் ரூபா 13,715,992 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 840 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான வியாபார மற்றும் கழிவுநீர் அகற்றுதலுடன் தொடர்புடைய

கடன்பட்டோர் மீதி இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. அவற்றில் உள்ளடக்கப்பட்ட நிலையான பதிவு மற்றும் துண்டிக்கப்பட்ட வாடிக்கையாளர் மீதிகள் முறையே 58 சதவீதம் மற்றும் 33 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. நிலையான பதிவிலிருந்தான நிலுவையாகவிருந்த மீதிகள் தொடர்பில் இனங்காணக்கூடிய வாடிக்கையாளர் எதுவும் இருக்காமையால், மேற்குறிப்பிட்ட மீதிகளின் அறவீட்டுத் தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஏனைய நிலுவையாகவிருந்த மீதிகளின் அறவீட்டிற்காக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை பற்றி அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றில் காட்டப்பட்டவாறு ஏனைய அறவிட வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய கடன்பட்டோர் மீதிகள் ரூபா 96,431,125 ஆக இருந்தது. கொழும்பு மாநகர சபை மற்றும் முதலீட்டுச் சபை (பீஓஐ) என்பவற்றிலிருந்து நிலுவையாகவிருந்த தொகை முறையே ரூபா 83 மில்லியன் மற்றும் ரூபா 11 மில்லியன் தொகைகள் தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான அறவீட்டு நடவடிக்கையும் எடுக்காமல் 3 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,787,385 கூட்டு மொத்தத் தொகையான அசைவற்ற பதவியணியினர் கடன் மீதிகள் அறவிடப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(ஈ) பொறுப்புடைய நபர்களிடமிருந்து 2012, 2010 மற்றும் 2010 இற்கு முன்னரான காலப்பகுதியில் இனங்காணப்பட்ட களணி, கேகாலை மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகத்தில் களஞ்சியத்திலுள்ள இருப்புக் குறைவு காரணமாக ஏற்பட்ட முறையே ரூபா 2,421,893, ரூபா 581,232 மற்றும ரூபா 17,530 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 5,302,193 தொகையான இடைப்போக்கிலுள்ள இருப்பினை (குறி 203) அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் நீண்டகாலத்திற்கு மேலாக கணக்குகளில் இருந்தது.

(ஊ) ரூபா 36,622,723 தொகையான இடைப்போக்கிலுள்ள இருப்பு (வெளிநாடு 207) புலனாய்வு செய்யப்படாமல் ஐந்தொகை திகதியில் 06 மாதங்களிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. இந்நிலமை 2014 மே மாத இறுதி வரையும் மாற்றமடையாதிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 சனவரி 01 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 73,610,959 ஆன நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற கழிவு நீர் கடன்பட்டோர் மீதி (கணக்கு இல. 271/2) 2012 ஆம் ஆண்டில் ரூபா 42,240,924 ஆல் குறைக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், பேரேட்டுக் கணக்கில் அனுமதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பதிவிற்கான மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் ஏனைய அவசியமான ஆதாரமான ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 227,175,000 பெறுமதியான பின்வரும் நிலையான சொத்துக்களின் உரிமையாண்மையை உறுதிப்படுத்துவதற்கு உரித்துறுதி, சுவீகரிப்பு அறிவித்தல், வர்த்தகமானி அறிவித்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

| **விடயம்** | **இடம்** | **தொகை** |
|---|---|---|
| | | **ரூபா** |
| காணி- கொழும்பு மாநகர சபை பகுதி | ஏஜீஎம் அலுவலகம், மாளிகாவத்தை | 29,000,000 |
| நிலத்தடி நீர்த்தேக்க நிலங்கள் | (i) நிலாவெளி | 7,500,000 |
| | (ii) கொழும்பு பெரும்பாக கழிவு நீர் செயற்திட்டம் | 187,700,000 |
| கட்டிடங்கள் | கொழும்பு பெரும்பாக கழிவு நீர் செயற்திட்டம் | 2,975,000 |
| **மொத்தம்** | | **227,175,000** |

(இ) மீள அறவிடவேண்டிய வேலைகள் குறுகிய காலத்திற்கும் முடியக்கூடிய வேலைகளாக இருந்தன. எவ்வாறாயினும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிற்கு மேலாக பொறுப்பேற்கப்பட்ட 50 மீள அறவிடவேண்டிய வேலைகள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 87,271,439 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் செலுத்த வேண்டியவையாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் அந்த வேலைகளின் தனிப்பட்ட வேலை

தொடர்பான தாமதத்திற்கான காரணங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 6,042,111 ஆன பெறவேண்டிய அசைவற்ற மீள அறவிடவேண்டிய வேலைகள் எந்தவித விபரங்களும் இல்லாமல் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருகோணமலை பிராந்திய அலுவலகத்தில் அவதானிக்கப்பட்டதுடன் இது எவ்வித புலனாய்வும் இல்லாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக ஆண்டுதோறும் பேரேட்டுக் கணக்குகளில் முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, ரூபா 8,663,620,800 ஆன புத்தகப் பெறுமதியைக் கொண்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எவ்வித புலனாய்வும் செய்யப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் 2010 இலிருந்து பௌதீக மெய்மையாய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

அவைகளில், ரூபா 2,037,405,374 பெறுமதியான சொத்துக்கள் போலியாக இனங்காணப்பட்டிருந்ததுடன் 2012 இல் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. ஆனால், போலிகளின் திருத்தத்திற்காக அனுமதிக்கப்பட்ட நாளேட்டுப் பதிவுகள் உள்ளடங்கலான் போலிகளின் விபரங்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை. மேலும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,626,215,426 பெறுமதியான மிகுதிச் சொத்துக்களின் உளதாகும் தன்மையும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 107,794,723 மற்றும் ரூபா 18,858,109 ஆன முறையே 2012 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட மற்றும் இணக்கம் செய்யப்படாத நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் என்பவற்றினை தெளிவாக்குவதற்கு அனுமதிக்கப்பட்ட பதிவுகள் தொடர்பில் நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**1.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பவற்றிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (எம்எஸ்டி) அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1997 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஐம்பத்தியேழு வாகனங்கள் வரிசை அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் சார்பில் ரூபா 1,471,427 செலவினம் ஏற்பட்டிருந்தது.

அதற்கு மேல், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட ஏழு ஊழியர்களிற்காக 2012 ஆம் ஆண்டின் போது சபையால் ரூபா 2,462,364 தொகையான சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 626 இற்கு முரணாக, 34 செயற்திட்டங்களில் 23 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட தொடர்பில் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 737,409,182 ஆன நேரொத்த வரிக்குப் முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 407,019,536 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 330,389,644 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது. பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | | **மாற்றம்** | |
|---|---|---|---|---|
| | **2012 ரூபா** | **2011 ரூபா** | **ரூபா** | **%** |
| வருமானம் | 14,344,205,499 | 12,609,703,240 | 1,734,502,259 | 13.76 |
| விற்பனைக்கிரயம் | (8,821,797,602) | (7,470,490,082) | (1,351,307,520) | 18.09 |
| **மொத்த இலாபம்** | **5,522,407,897** | **5,139,213,158** | **383,194,739** | **7.46** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் மிகை | 1,586,511,700 | 1,318,540,370 | 267,971,330 | 20.32 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிர்வாகச் செலவினம் | (5,848,136,492) | (4,680,820,504) | (1,167,315,988) | 24.94 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (54,474,810) | (227,425,798) | 172,950,988 | (76.05) |
| **செயற்பாட்டு இலாபம்** | **1,206,308,295** | **1,549,507,226** | **(343,198,932)** | **(22.15)** |
| நிதி வருமானம் | 213,955,983 | 131,257,102 | 82,698,882 | 63.01 |
| நிதிக் கிரயம் | (1,013,244,742) | (943,355,146) | (69,889,595) | 7.41 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **407,019,536** | **737,409,182** | **(330,389,644)** | **(44.80)** |
| வரி | (40,217,024) | (53,055,544) | 12,838,520 | (24.20) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **366,802,512** | **684,353,637** | **(317,551,125)** | **(46.40)** |

இதன்படி, இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வுப்படி, ரூபா 1,167,315,988 ஆல் நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபத்தின் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட சம்பள மீளாய்வு நிர்வாகச் செலவினம் அதிகரிப்பதற்கு காரணமாயிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் ஒரு ஊழியரின் ரூபா 560,437 பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் 19 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2011 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 74,629 ஆனது 2012 ஆம் ஆண்டில் ரூபா 37,932 இற்கு குறைவடைந்து 49 சதவீத குறைவை வெளிப்படுத்துகின்றது.

(இ) சபையானது நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களில் வட்டியாக உற்பத்தி செய்யப்பட்ட தண்ணீரின் அலகுகொன்று ரூபா 4.90 தொகை ஏற்படுவதற்கு இருந்ததுடன் இது அலகு ஒன்றிற்கான மொத்த உற்பத்திக் கிரயத்தின் 13 சதவீதமாக இருந்தது. வெளிநாட்டுக் கடன்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இந்த வீதம் அடுத்துவரும் ஆண்டில் மேலும் அதிகரிக்க வேண்டுமென இது காட்டுகின்றது.

## 2.2. தொழிற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 சுத்தமான நீரின் உற்பத்தி மற்றும் விநியோகம்

சபையானது 2012 ஆம் ஆண்டின் போது மற்றும் 2011 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 525.6 மில்லியன் கனமீற்றர்கள் சுத்தமான தண்ணீர் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இது 7.26 சதவீத அதிகரிப்பை காட்டியது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட தண்ணீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 1,585,018 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் அதனை ஒப்பிடும் போது 9.5 சதவீத அதிகரிப்பை காட்டுகின்றது.

### 2.2.2 வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
|---|---|---|---|---|---|
| நீர் உற்பத்தி (கன மீற்றர்) | 525.6 | 490.0 | 469.0 | 449.0 | 440.2 |
| நீர் நுகர்வு (கன மீற்றர்) | 368.5 | 344.5 | 321.5 | 309.2 | 300.9 |
| வருமானமற்ற நீர் (கன மீற்றர்) | 157.1 | 145.5 | 147.5 | 139.8 | 139.3 |
| நீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற நீர் | **29.89** | **24.64** | **31.45** | **31.14** | **31.65** |

இதன்படி, இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், நீர் இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் என்பவற்றினால் வருமானமற்ற நீர் 30 சதவீதத்தைப் பிரதிதித்துவப்படுத்திய அதேநேரம் 2012 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் 49 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமையைத் தடுப்பதற்குத் தவறியமை காரணமாக 2012 இல் நுகரப்பட்ட நீரின் ஒரு அலகிற்கு ரூபா 7.15 மேலதிகத் தொகை சபையால் ஏற்கவேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது. அது ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயத்தில் 43 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், பிரதான நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் நடைமுறையை

விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் வீதம் குறைவதைக் காட்டவில்லை.

(இ) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்படுத்துவதற்கான சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர்க் குழாய்களின் போதிய மீள் நிருமாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

நீர்க் கசிவுகள் காரணமாக மாற்றப்பட வேண்டிய பிரதான நீர் விநியோகக் குழாய்கள் இதுவரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. பாரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(ஈ) கொழும்பு நகரைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கழிவுநீர் முறைமை
---

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவு நீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

சபையின் தலைவர் இது தொடர்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*தேசிய கொள்கையில் எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகையின் 7 சதவீதத்திற்கு கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளின் மேவுகை அந்த செயற்திட்டம் உத்தரவாதமளிப்போரை இனங்காணாமல் நன்கொடையாளர்களால் எண்ணிக்கை*

*வரையறுக்கப்பட்ட கழிவு நீர் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்தமையால் அடையமுடியாதிருந்தது.*

### 2.2.4 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளிற்காக அதிகமான செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஒருசீரான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.5 நிதி முகாமைத்துவம்

நீர் வழங்கல் திட்டத்திற்காக 2012 திசெம்பர் 31 இல் பொதுத் திறைசேரி ஊடாக சபையால் பெறப்பட்டிருந்த மொத்த வெளிநாட்டுக் கடன் மீதி ரூபா 32,574 மில்லியன் அல்லது மொத்தச் சொத்தின் 14.69 சதவீதமாக இருந்தது. கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள கடன் தவணைப்பணம் ரூபா 5,356 மில்லியனாக இருந்ததுடன் இதன்படி தாமதத்திற்காக செலுத்தப்பட்ட மேலதிக வட்டி ரூபா 149 மில்லியனாகவிருந்தது.

| ஆண்டு | நிலுவையாகவுள்ள கடன் தவணைக் கட்டணங்கள் மூதல் கொடுப்பனவு | வட்டி | மொத்தம் | உரிய திகதியில் வட்டி செலுத்தப்படாமைக் காக செலுத்தப்பட்ட மேலதிக வட்டி |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2012 | 990 | 1,732 | 2,722 | -- |
| 2011 | 957 | 1,036 | 1,993 | 57 |
| 2010 | 587 | - | 587 | 82 |
| 2008 | 54 | - | 54 | 10 |
| **மொத்தம்** | **2,588** | **2,768** | **5,356** | **149** |

## 3. இனங்காணப்பட்ட நட்டங்கள்

15 அலகுகளை விட குறைவான மாதாந்த நுகர்வையுடைய நுகர்வோர்கள் 2009 ஆம் ஆண்டிற்காக நாட்டின் தேசிய பாதீடு மூலம் பிரேரிக்கப்பட்டவாறு ரூபா 20 கழிவொன்றிற்காக தகுதியுடையவர்களாக உள்ளனர். எனினும் அந்த ஆண்டிற்கு மாத்திரம் அந்த தீர்மானம் அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் சொல்லப்பட்ட நோக்கத்திற்காக நிதிகள் எதுவும் ஒதுக்கப்பட்டிருக்காததுடன் சபையானது நிதியளித்தல் ஒழுங்கமைப்பு இருந்த போதிலும் சபையானது 2012 ஒக்தோபர் வரை தள்ளுபடி தொடர்ந்திருந்தது. எனவே, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான சபைக்கான மொத்த நட்டம் ரூபா 417.33 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டுவாரியான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நட்டம் ரூபா மில்லியன் |
|---|---|
| 2012 | 118.61 |
| 2011 | 159.78 |
| 2010 | 138.94 |
| **மொத்தம்** | **417.33** |

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது, நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைககள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணக்கஞ் செய்தல்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) கணக்கீடு

(உ) செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு

(ஊ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்